**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 391/2023**

LW 10 PW3

| | | | |
|---|---|---|---|
| Name | குருசாமி | Caste | |
| Father's/Husband Name | முருகையன் | Calling | |
| Village | திருப்பூண்டி காரைநகர் | Religion | |
| Taluk | | Age | 56/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**25-09-2025** -

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் திருப்பூண்டி காரை நகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை காரை நகர் மெயின் ரோட்டில வைத்து செய்து கொடுத்தேன். **மேற்படி கையொப்பங்கள் மட்டும் அ.சா. ஆ- 2 மற்றும் அ.சா. ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்ததால் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது**- )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. கடந்த 14.12.2022 ம் தேதி மாலை 4 மணி சுமாருக்கு நானும் எனது நண்பர் அருண்பிரசாத் என்பவரும் வேதாரண்யம் மெயின் ரோடு பி.ஆர் கைகாட்டி அருகில் சொந்த வேலையாக சென்ற போது கீழையூர் போலீசார் ஆஜர் எதிரிகளை பிடித்து விசாரணை செய்து கொண்டிருந்ததாகவும் அதில் எதிரி குணால் என்பவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும் அதனடிப்படையில் வழக்கு தடய பொருட்களை கைப்பற்றியதாகவும் மேற்படி சம்பவங்களுக்கு சாட்சியாக நானும் அருண்பிரசாத் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும கூறிவிட்டு தற்போது சங்கதிகளை மறுத்து கையொப்பங்களை மட்டும் ஒத்து கொண்டு எதிரிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கீழையூர் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பங்கள் செய்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**

**KILVELUR**

**CC 391/2023**

LW 1 PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | உஷா | Caste | |
| Father's/Husband Name | அன்பழகன் | Calling | |
| Village | திருப்பூண்டி காரைநகர் | Religion | |
| Taluk | | Age | 53/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**25-09-2025**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் திருப்பூண்டி காரை நகரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 23.11.2022 ம் தேதி 12.30 மணியளவில் நானும் எனது இரண்டு மகள்களும் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபொழுது கொல்லைப்புற கதவு இடிக்கும் சத்தம் கேட்டு நானும் எனது மூத்த மகள் சுபத்தராவும் வந்து பார்த்தபொழுது கதவை உடைத்து கொண்டு இரண்டு நபர்கள் உள்ளே வந்தார்கள். அதில் ஒருவர் கையில் கத்தி வைத்திருந்தார். மற்றொருவர் கையில் கம்பி போன்று கையில் வைத்திருந்தார். வந்தவர்கள் காது கழுத்தில் உள்ளதையெல்லாம் கழற்ற சொன்னார்கள். அப்பொழுது எங்களிடம் எதுவும் இல்லை என்று நான் கூறினேன். அந்த சமயம் எனது கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதை எனது மூத்த மகள் பார்த்து விட்டு பயந்து பீரோ சாவியை எடுத்து வந்திருந்த ஒருவரிடம் கொடுத்தார்.

2. மூன்று ஜோடி தோடு, ஒரு மோதிரம், திருமாங்கல்யம் மற்றும் ஆறு

நானல், குண்டு நான்கு மற்றும் ஆறு காசுகள் மொத்தம் சேர்த்து 7 பவுன்களை பீரோவை திறந்து அவர்களே எடுத்து கொண்டு எங்கள் கையில இருந்த இரண்டு போன்களையும் பிடுங்கி கொண்டு செல்லும்பொழுது எனது வீட்டு மற்றொரு அறையில் எனது சின்ன மகள் தூங்கி கொண்டிருந்தாள். அந்த அறைக்கதவை வந்திருந்த நபர்களில் ஒருவர் அறைக்கதவை இரும்பு பாறைக் கொண்டு கையில் வைத்து கொண்டு உடைக்க முற்பட்டார். அப்போது அவரிடமிருந்து கதவை திறக்காதவாறு அந்த பாறையை பிடுங்கும்பொழுது எனது வலது முன் நெற்றியில் பட்டு, இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது மற்றொருவர் கத்தியை எடுத்து கொண்டு அருகில் வரும்பொழுது அந்த கத்தியை பிடித்ததில் கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. சத்தம் போட்டால் கொன்று விடுவதாக மிரட்டினார்கள். அதனால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

3. பின்னர் கொல்லைப்புறம் வழியாகவே சென்று விட்டார்கள். செல்லும்பொழுது அவர்களிடம் எனது மகளின் செல்போனையாவது கொடுக்கும்படி கெஞ்சி கேட்டேன். அவர்கள் கொல்லைப்புறம் வீசி விடுவதாக கூறினார்கள். ஆனால் எங்களுக்கு செல்போன் கிடைக்கவில்லை. எங்கள் வீட்டிற்கு வந்து நகையையும் செல்போனையும் பறித்து கொண்டு சென்றவர்கள் முகத்தை போர்வை துணியால் மூடிக் கொண்டதால் நாங்கள் அவர்களின் கண்களை மட்டும் தான் பார்த்தோம். தற்போது நீதிமன்றத்தில் மேற்படி செயலில் ஈடுபட்ட நபர்கள் ஆஜராகியுள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமும் இல்லை தெரியவும் இல்லை. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலததில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்னிட்டு ஆறு மாதம் கழித்து போலீசார் என்னை மீண்டும் காவல் நிலையத்திற்கு வர சொன்னார்கள். அங்கு என்னுடைய நகையை அடையாளம் காண்பிக்க சொன்னார்கள். தற்போது நீதிமன்றத்தில் உள்ள வழக்கு சொத்தான எனது நகைகளை நான் இடைநிலை மனு செய்து நான் என் வசம் பெற்றுக் கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் புகார் வாக்குமூலம் 15.12.2022 அன்று காலையில் தான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. ஏழு பவுன் நகைகள் காணாமால் போனதாக புகார் வாக்குமூலத்திலும் போலீசார் வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் மனு செய்து திரும்ப பெற்றுக் கொண்ட நகைகள் காணமாமல் போன நகைக்கு நிகரான எடையுள்ள வேறு நகைகளை பெற்று கொண்டேன் என்றால் சரியல்ல, நான் எனது நகைகளை தான் பெற்றுக் கொண்டேன். நான் திரும்ப பெற்று கொண்ட நகைகள் நான் அணிந்திருந்து உபயோகத்தில் இருந்த நகைகள் என்றால் சரியல்ல. 7 பவுன் நகைகள் பெறவில்லை என்றாலும் 4 பவுன் நகையை மட்டும் தான் பெற்றேன் என்றாலும் சரிதான். திருடு போனதாக சொல்லப்படும் நான்கு தோடுகளில் மூன்று தோடுகள் மட்டுமே திரும்ப பெற்றேன். போலீசார் என்னை மருத்துவமனையில் மட்டும் தான் விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. இரண்டு முறை வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள்.

2. நான் காவல் நிலையம் சென்று எனது நகைகளை அடையாளம் காண்பித்ததாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எதிரிகள் கத்தி மற்றும் இரும்பு கம்பி போன்று இருந்த ராடு ஆகியவற்றை போலீஸ் விசாரணையில் சொல்லாமல் தற்போது தான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் இரண்டு செல்போன்களை எங்களிடம் பறித்து சென்று வீசி விடுவதாக சொல்லியுள்ளதை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரண்டு செல்போன்களும் திருடு போனதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் வசிக்கும் வீட்டின் அருகில் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் கொஞ்சம் தூரத்தில் உள்ளது. எனது வீட்டின் அருகில் குடியிருப்பு வீடுகள் அதிகம் உள்ளது என்றும் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

3. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் எனக்கு காயம் ஏற்பட்டதில் உடைகளில் ரத்தம் படிந்திருந்தது அந்த ரத்தம் படிந்த உடைகளை போலீசார் விசாரணையில் நான் கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு இரத்த காயம் ஏற்படவில்லை என்றாலும் அதனால் தான் ரத்தம் படிந்த உடைகளை நான்

**கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. முதல் விசாரணையில் என்னை கொலை செய்து விடுவதாக நான் சொல்லியுள்ளதை போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் இரண்டு நபர்கள் வரவில்லை என்றாலும் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நகைகள் எதுவும் திருட்டு போகவில்லை என்றாலும் சரியல்ல. இந்த புகாரானது எனக்கே தெரிந்த காரணத்தினாலும் காலதாமதமாகவும் பொய்யான விபரங்களை கொண்டு கொடுக்கப்பட்ட புகார் என்றாலும் சரியல்ல. நான் முன்னுக்கு பின்னாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.**

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 391/2023**
LW 2 PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | சுபத்ரா | Caste | |
| Father's/Husband Name | அன்பழகன் | Calling | |
| Village | திருப்பூண்டி காரைநகர் | Religion | |
| Taluk | | Age | 25/2025 |

**Solemnly affirmed in accordance with the provision of Act I of 1872, Chapter X of the day of**

**25-09-2025**

**எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

1. நான் திருப்பூண்டி காரை நகரில் குடும்பத்துடன் வசித்து வீட்டில் இருந்தே ஆன்லைனில் வேலை செய்து வருகிறேன். கடந்த 23.11.2022 ம் தேதி இரவு 12.30 மணியளவில் நானும் எனது தங்கை ஒரு அறையிலும் எனது அம்மா மற்றொரு அறையிலும் வீட்டில் தூங்கி கொண்டிருந்தபொழுது கொல்லைப்புற கதவு இடிக்கும் சத்தம் கேட்டு நானும் எனது தங்கை மற்றும் எனது அம்மாவும் வந்து பார்த்தபொழுது கதவை உடைத்து கொண்டு இரண்டு நபர்கள் உள்ளே வந்தார்கள். எனது தங்கை பயந்து கொண்டு உள்ளே சென்று கதவை தாழிட்டு கொண்டார். அதில் ஒருவர் கையில் கத்தியா அல்லது அறுவாளா என்று குறிப்பிட்டு சொல்ல தெரியவில்லை. ஆனால் கையில் வைத்திருந்தார். மற்றொருவர் கையில் கடப்பாறை போன்று கையில் வைத்திருந்தார். வந்தவர்கள் காது கழுத்தில் உள்ளதையெல்லாம் கழற்ற சொன்னார்கள். அப்பொழுது எங்களிடம் எதுவும் இல்லை என்று எனது அம்மா கூறினார்கள்.

2. அந்த சமயம் எனது அம்மா கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டியதை நான்

பார்த்து விட்டு பயந்து பீரோ சாவியை எடுத்து வந்து வந்திருந்த ஒருவரிடம் கொடுத்தேன். மூன்று ஜோடி தோடு, ஒரு மோதிரம், திருமாங்கல்யம் மற்றும் ஆறு நானல், குண்டு நான்கு மற்றும் ஆறு காசுகள் மொத்தம் சேர்த்து 7 பவுன்களை பீரோவை திறந்து அவர்களே எடுத்து கொண்டு எங்கள் கையில இருந்த இரண்டு போன்களையும் பிடுங்கி கொண்டு செல்லும்பொழுது எனது வீட்டு மற்றொரு அறையில் எனது தங்கை தூங்கி கொண்டிருந்தாள். அந்த அறைக்கதவை வந்திருந்த நபர்களில் ஒருவர் அறைக்கதவை இரும்பு பாறையைக் கையில் வைத்துக் உடைக்க முற்பட்டார். அப்போது அவரிடமிருந்து கதவை திறக்காதவாறு அந்த பாறையை பிடுங்கும்பொழுது எனது அம்மாவின் வலது முன் நெற்றியில் பட்டு, இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது மற்றொருவர் கத்தியை எடுத்து கொண்டு அருகில் வரும்பொழுது அந்த கத்தியை பிடித்ததில் கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டு இரத்தம் வந்தது. சத்தம் போட்டால் கொன்று விடுவதாக மிரட்டினார்கள். அதனால் நாங்கள் அமைதியாக இருந்தோம்.

3. பின்னர் கொல்லைப்புறம் வழியாகவே சென்று விட்டார்கள். செல்லும்பொழுது அவர்களிடம் என்னுடைய செல்போனையாவது கொடுக்கும்படி கெஞ்சி கேட்டேன். அவர்கள் கொல்லைப்புறம் வீசி விடுவதாக கூறினார்கள். ஆனால் எங்களுக்கு செல்போன் கிடைக்கவில்லை. எங்கள் வீட்டிற்கு வந்து நகையையும் செல்போனையும் பறித்து கொண்டு சென்றவர்கள் முகத்தை போர்வை துணியால் மூடிக் கொண்டதால் நாங்கள் அவர்களின் கண்களை மட்டும் தான் பார்த்தோம். தற்போது நீதிமன்றத்தில் மேற்படி செயலில் ஈடுபட்ட நபர்கள் ஆஜராகியுள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகமும் இல்லை தெரியவும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எத்தனை பவுன் திருட்டு போனதாக எனக்கு தெரியாது எனது அம்மாவுக்குத்தான் தெரியும். கடப்பாறையை பிடுங்கும்போது தான் எனது அம்மாவுக்கு ரத்தக் காயம் ஏற்பட்டது என்று போலீசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. செல்போன் திருட்டு போனதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. செல்போன் என்ன வகை செல்போன் செல்போனின் நம்பர் என்னவென்று போலீசார் விசாரணையில்

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. கொல்லைப்புற கதவை உடைத்து கிடந்தன அதை போலீசார் வந்து பார்த்தனர்..

2. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் இரண்டு நபர்கள் கதவை உடைதது கொண்டு வரவில்லை என்றும், எந்த ஆயுதங்களையும் வைத்திருக்கவில்லை என்றும் என் அம்மா ஆயுதங்களை பிடுங்கவில்லை என்பதால காயங்கள் ஏற்படவில்லை என்றாலும் நகைகள் செல்போன்கள் எதுவும் திருட்டு போக வில்லை என்றாலும் போலீசார் சொல்லிக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் முதல் விசாரணையில் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் முன்னுக்கு பின் முரணாகவும் சாட்சியம் அளிக்கிறனே் என்றாலும் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/- ர.மீனாட்சி, எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,-
கீழ்வேளுர்.